தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.02.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ் 3.45 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மழைநீர் சேகரிப்பு அமைப்பு, இறகுப்பந்து விளையாட்டுத்திடல் உள்ளிட்ட பல்வேறு வசதிகளுடன் அமைக்கப்படவுள்ள புதிய நீரூறிஞ்சி பூங்காவிற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், பெருநகர சென்னை மாநகராட்சி மத்திய வட்டார துணை ஆணையாளர் எச்.ஆர்.கௌஷிக், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (10.02.2026) கொளத்தூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட ஜவகர் நகர், சிவ இளங்கோ சாலையில் சென்னை பெருநகர குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்று வாரியம் சார்பில் 2.82 கோடி ரூபாய் செலவில் மேம்படுத்தப்பட்ட H2S வாயு கட்டுப்பாட்டு அமைப்புடன்கூடிய IOT மூலம் செயல்படுத்தப்படும் தானியங்கி கழிவுநீர் உந்து நிலையத்தின் செயல்பாட்டினை தொடங்கி வைத்து பார்வையிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர்பாபு, மேயர் திருமதி.ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதி மாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப. ரங்கநாதன், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், சென்னை குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நேற்று (10.2.2026) சென்னை, மகளிர் கிறிஸ்துவக் கல்லூரியில் நடைபெற்ற அகில இந்திய கிறிஸ்துவ உயர்கல்வி சங்கம் (All India Association for Christian Higher Education) மற்றும் மகளிர் கிறிஸ்துவக் கல்லூரி (Women's Christian College) இணைந்து நடத்திய நன்றி தெரிவிக்கும் விழாவில், உலகம் உங்கள் கையில் திட்டத்தின் கீழ் கல்லூரி மாணவிகளுக்கு மடிக்கணிணிகள் வழங்கியதற்கு மாணவிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர். உடன் நாடாளுமன்ற உறுப்பினர் தயாநிதிமாறன், சட்டமன்ற உறுப்பினர்கள் மரு.நா.எழிலன், இனிகோ இருதயராஜ், இ.பரந்தாமன் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி நிலைக் குழு தலைவர் நே.சிற்றரசு ஆகியோர் உள்ளனர்.

நேற்று (10.02.2026) சென்னை, மேடவாக்கம், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி 50வது ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சியில், பொன் விழா ஆண்டு சிறப்பு மலரினை அமைச்சர்கள் மா. சுப்ரமணியன், முனைவர் கோவி. செழியன், முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் வெளியிட்டனர். இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சென்னை உயர்நீதி மன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் கே.என் பாஷா, கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஜனாப் எம்.ஜி. தாவூத் மியாகான், முதல்வர் முனைவர் மோ.அம்துல் தவாப் ஆகியோர் கலந்து கொண்டனர்.

தி.மு.க. - காங்கிரஸ் இடையே இணக்கமான நல்லுறவு!

இராமநாதபுரத்தில் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேச்சு!

இராமநாதபுரம். பிப். 11-

2026 சட்டமன்றத் தேர்தல் அறிக்கை தயாரிக்கும் குழுவின் கருத்துக் கேட்பு கூட்டம் நேற்று (10/02/2026) இராமநாதபுரத்தில் உள்ள ஹோட்டல் பீமாஸில் நடைபெற்றது. இந்தக் கூட்டத்திற்கு, தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி தலைமை தாங்கி, அனைத்து தரப்பினரிடமிருந்தும் கருத்துகளை கேட்டறிந்து, கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்.

பின்னர் செய்தியாளர்களைச் சந்தித்த கனிமொழி கருணாநிதி எம்.பி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் தேர்தல் அறிக்கையை மக்கள் எப்போதும் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கிறார்கள். ஏனென்றால் அந்தத் தேர்தல் அறிக்கையில் கொடுக்கும் வாக்குறுதிகளை நிறைவேற்றக்கூடிய இயக்கம் திராவிட முன்னேற்றக் கழகம். தேர்தல் அறிக்கையில் அளித்த வாக்குறுதிகளை முதலமைச்சர் நிறைவேற்றி இருக்கிறார்.

தேர்தல் நேரத்தில் வாக்குறுதிகளாக அறிவிக்காத பலவற்றை நிறைவேற்றித் தந்திருக்கக்கூடிய முதலமைச்சர். அவருடைய அறிவுரையின்படி, இந்தத் தேர்தல் அறிக்கை குழு பல மாவட்டங்களுக்கு சென்று, அந்தந்த பகுதிகளில் உள்ள மக்களை சந்தித்து, அவர்களுடைய கருத்துகள், கோரிக்கைகள் மற்றும் எண்ணங்களை ஒருங்கிணைத்து தேர்தல் அறிக்கையாக உருவாக்க இருக்கிறோம்.

இன்று ராமநாதபுரம் மாவட்டத்தில், பல்வேறு அமைப்புகளிலிருந்து வந்த மீனவ சமூகத்தினர் மட்டுமின்றி, சில விவசாயிகள், நெசவாளர்கள் உள்ளிட்ட பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்தவர்கள் மற்றும் சில மத அமைப்புகளைச் சேர்ந்த பலரும் எங்களை நேரில் சந்தித்து, அவர்களுடைய கருத்துகளை எங்களுடன் பகிர்ந்து கொண்டுள்ளனர். நிச்சயமாக அந்தக் கருத்துகள் அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு, எது தேர்தல் அறிக்கையில் கொண்டு வருவதற்கு சாத்தியமோ அதை எல்லாம் நிச்சயமாக அதில் இடம்பெறும்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் இருந்து முன்வைக்கப்பட்ட பிரதான கோரிக்கைகள் குறித்த கேள்விக்கு, சில பகுதிகளில் அடிப்படை தேவைகள் தொடர்பான குறைபாடுகள் உள்ளதாகவும், குறிப்பாக மீனவர்களின் பிரச்சனைகள் மிகப்பெரும் அளவில் பிரச்சனைகளை குறித்து சொன்னார்கள்.

இந்த ஆட்சியில் எவ்வளவு சதவீதம் வாக்குறுதிகளை நிறைவேற்றி உள்ளீர்கள் என்ற கேள்விக்கு; இதைப் பற்றி முதலமைச்சர் அறிக்கை வெளியிட்டுள்ளார். ஊடகத்தோடு இரண்டு அமைச்சர்கள் அமர்ந்து, அதுக்கான ஒரு பிரஸ் மீட்டும் கொடுத்து உள்ளார்கள். இன்றைக்கு வரைக்கும் கிட்டத்தட்ட தேர்தல் அறிக்கையில் 505யில் 400க்கு மேல் வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளது. சில வாக்குறுதிகள், ஒன்றிய அரசாங்கம் நமக்கு எதிராகவே செயல்பட்டுக் கொண்டிருப்பதால் அதை நிறைவேற்ற முடியாத நிலை இருக்கிறது. சில வாக்குறுதிகள் பரிசீலனையில் உள்ளது. முக்கியமாக பெண்கள் மற்றும் மாணவர்களுக்காக முதலமைச்சர் பல்வேறு திட்டங்களை செயல்படுத்தியுள்ளார். இத்திட்டங்கள் அனைத்தும் நிச்சயமாக முன்னிலைப்படுத்தப்படும்.

தொடர்ச்சியாக அரசுக்கு எதிரான போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்ற கேள்விக்கு, அவர்களுடைய கோரிக்கைகளை வலியுறுத்தக்கூடிய ஒரு நேரம் இந்த நேரம். அந்தக் கோரிக்கைகள் அனைத்தையும் முதலமைச்சர் அவர்களை நேரில் அழைத்து பேசித் தீர்வு காண்கிறோம். பல ஆண்டுகளாக தீர்வு காண முடியாத பல விஷயங்களுக்கு முதலமைச்சர் தீர்வு கண்டுள்ளார்.

திமுக-காங்கிரஸ் கூட்டணி தொடர்பான கேள்விக்கு, தனி நபர்கள் கூறும் கருத்துகளுக்கு கட்சி பதிலளிக்க முடியாது. திமுக மற்றும் காங்கிரஸ் தலைமைகளுக்கு இடையில் இணக்கமான நல்லுறவு நிலவுகிறது; கூட்டணிக்கு எந்தவித பாதிப்பும் இல்லை. வரும் சட்டமன்றத் தேர்தலில் இரு கட்சிகளும் இணைந்து செயல்படும். தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட உள்ளதால், தேர்தல் குழுவும் நிச்சயமாக அறிவிக்கப்படும்.

நித்தம் நித்தம் பொய் சொல்வதாக' முன்னாள் முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி பேசியது குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு, 'அவரைப் பற்றி சொல்கிறாரா?' என்று கேள்வி எழுப்பினார்.

சிறுபான்மையின மக்களுக்கு

என்றென்றும் பாதுகாப்பு அரண் கழக அரசு!

காயிதே மில்லத் கல்லூரி பொன்விழா நிறைவு நிகழ்ச்சியில் - அமைச்சர் கோவி. செழியன் பெருமிதம்!

சென்னை, பிப்.11-

சிறுபான்மையின மக்களுக்கு என்றென்றும் பாதுகாப்பு அரணாக இவ்வரசு உள்ளது - காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி 50-வது ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சியில் உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

சென்னை, மேடவாக்கம், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி 50-வது ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வாழ்த்துச் செய்தியோடு தொடங்கப்பட்டு, பொன்விழா ஆண்டு சிறப்பு மலரினை மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் மா. சுப்ரமணியன், உயர் கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் மற்றும் பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் நேற்று (10.02.2026) வெளியிட்டனர்.

இவ்விழாவில் உயர்கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:-

சிறுபான்மையின மக்களுக்கு என்றென்றும் பாதுகாப்பு அரணாக இவ்வரசு செயல்படுகிறது. 1989-ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல ஆணையத்தை அமைத்தவர் நம்முடைய முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள், மேலும், 1990-ஆம் ஆண்டு அப்துல் ஜாபர் தலைமையில் சிறுபான்மையினர் நலக்குழு, 1999-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகம், 2007-ஆம் ஆண்டு சிறுபான்மையினர் நல இயக்கம், 2010-ஆம் ஆண்டு தமிழ்நாடு சிறுபான்மையினர் ஆணையச் சட்டம், இஸ்லாமிய சமுதாய உலமாக்களுக்கும், பள்ளிவாசலில் பணிபுரியும் மோதினார்களுக்கும் இலவச சைக்கிள் ஆகிய திட்டங்களை செயல்படுத்தினார். அவரின் வழித்தோன்றலாக, கர்நாடகாவில் இஸ்லாமியர் அணியும் உடை விவகாரத்தில் கலவரமாகியபோது, தன்னிகரில்லாத் தலைவர் முதலமைச்சர் அவர்களின் தலைமையிலான அரசு தமிழ்நாட்டில் உள்ள கல்வி நிறுவனங்களில் இஸ்லாமியர் அணியும் ஹிஜாபை அனுமதித்தது. மேலும், சிறுபான்மையினர் விடுதி மாணவ மாணவியர்க்கு சிறுபான்மையினர் பண்டிகை நாட்களில் சிறப்பு உணவு, சிறுபான்மையினர் அதிகம் வசிக்கும் மாவட்டங்களில் புதிய பணியிடங்களுடன் அலுவலகம், தமிழ்நாடு சிறுபான்மையினர் பொருளாதார மேம்பாட்டுக் கழகத்தின் வாயிலாக அதிக கடன்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை சிறுபான்மையின மக்களுக்காக முதலமைச்சர் அவர்கள் செயல்படுத்தி வருகிறார்.

மேடவாக்கம், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி, இன்று தனது 50-ஆம் ஆண்டு பொன்விழா நிறைவு நிகழ்ச்சி சிறப்பாகக் கொண்டாடுகிறது. வரலாற்றுச் சிறப்புமிக்க இந்நிறுவனத்தின் விழாவில் பங்கேற்பதில் மிகுந்த மகிழ்ச்சியும், பெருமையும் அடைகிறேன். தமிழ்மொழிக்கு ஒப்பற்ற சேவையாற்றிய காயிதே மில்லத் அல்ஹாஜ் எம். முகமது இஸ்மாயில் சாஹிப் அவர்களின் தொலைநோக்கு சிந்தனையின் விளைவாக உயர் கல்வி அனைவருக்கும் எட்டவேண்டும் என்ற இலக்குடன் இந்தக் கல்லூரி தொடங்கப்பட்டது.

1974 ஆம் ஆண்டு அரசியலுக்கு அப்பாற்பட்டு பலர் ஒன்றிணைந்து காயிதே மில்லத் மற்றும் சமூக அறக்கட்டளையை உருவாக்கி 1975-ம் ஆண்டு மீனம்பாக்கத்தில் வாடகை கட்டிடத்தில் 5 பாடப்பிரிவுகளுடன் 200 மாணவர்களைக்கொண்டு காயிதே மில்லத் ஆடவர் கல்லூரி தொடங்கப்பட்டது. இக்கல்லூரியினை முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள் திறந்து வைத்தார்கள். 5 பாடப்பிரிவுகளுடன் தொடங்கப்பட்ட அரசு உதவிபெறும் இக்கல்லூரி, தற்போது 7 வகையான பாடப்பிரிவுகளுடன் இருபாலர் கல்லூரியாக 2,000 மாணாக்கர்களுடன் சிறப்புடன் செயல்பட்டு, தற்போது பொன்விழாவினை நிறைவு செய்துள்ளது.

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக கூட்டுறவு, உருது, அரபிக் பாடப்பிரிவுகளில் இக்கல்லூரி மாணவர்கள் பல்கலைக்கழக தேர்வில் முதலிடம் பெற்று, பட்டம் பெறுவது பெருமைக்குரியது. குறைந்த கட்டணம், உயர்ந்த கல்வித் தரம் என்ற கொள்கையுடன், சென்னைப் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்ட அரசு உதவி பெறும் சிறுபான்மைக் கல்வி நிறுவனமாக, கடந்த 50 ஆண்டுகளாக சமூக முன்னேற்றத்திற்கான கல்விச்சேவையை சிறப்புடன் தொடர்ந்து வழங்கி வருகிறது.

இக்கல்லூரியில் பெண்கள் தடையின்றி பயில முதலமைச்சர் அவர்களால் அறிமுகப்படுத்தப்பட்ட "புதுமைப் பெண்" திட்டத்தில் 618 மாணவிகளும், "தமிழ்ப்புதல்வன்" திட்டத்தில் 595 மாணவர்களும், "நான் முதல்வன்" திட்டத்தில் 1,400 மாணாக்கர்களும், கடந்த மாதம் முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்ட "உலகம் உங்கள் கையில்" மாணவர்களுக்கு மடிக்கணினி வழங்கும் திட்டத்தில் 485 மாணாக்கர்களும் பயனடைந்துள்ளனர். மாணாக்கர்கள் இத்திட்டங்களை முழுமையாகப் பயன்படுத்தி, இந்தக் கல்லூரியின் மாணவர்கள் உலகத் தரத்தில் போட்டியிடக்கூடிய திறன் பெற்ற இளைஞர்களாக உருவாக வேண்டும் என்பதே அரசின் எதிர்பார்ப்பு.

பொன்விழா கொண்டாடும் இந்தச் சிறப்பான தருணத்தில், காயிதே மில்லத் ஆடவர் கல்லூரியின் நிர்வாகத்திற்கும், முதல்வர், பேராசிரியர்கள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் தமிழ்நாடு அரசின் சார்பில் எனது மனமார்ந்த பாராட்டுகளையும் வாழ்த்துகளையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த் ரமேஷ், சென்னை உயர்நீதிமன்ற முன்னாள் நீதிபதி நீதியரசர் கே.என் பாஷா, கல்லூரி செயலாளர் மற்றும் தாளாளர் ஜனாப் எம்.ஜி. தாவூத் மியாகான், OMEIAT தலைவர், ஜனாப் முஹம்மத் அஷ்ரப், South India Shelters Pvt. Ltd., தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர், Chennai CREDAI, தலைவர் ஜனாப் முஹம்மத் அலி, சிங்கப்பூர், ராயல் கிங்ஸ் குரூப், தலைவர், ஜனாப் சிராஜுத்தீன், கல்லூரி முதல்வர் முனைவர் மோ.அம்துல் தவாப், காயிதே மில்லத் கல்வி மற்றும் சமூக அறக்கட்டளை இணைச் செயலாளர் ஜனாப். ஏ. ஷாஹல் ஹமீத் மற்றும் பேராசிரியர்கள், மாணாக்கர்கள், பெற்றோர்கள் கலந்து கொண்டனர்.

திருவிடந்தையில் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் சிறப்புரையாற்றும் பாக முகவர்கள் கூட்டம்

மாதவரம் வடக்கு பகுதி BLA2 BLC BDA BYA அனைவரும் தவறாமல் பங்கேற்க வேண்டும்!

பகுதிச் செயலாளர் புழல் எம்.நாராயணன் வேண்டுகோள்!

மாதவரம், பிப். 11-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாதவரம் வடக்கு பகுதி திமுக சார்பில் பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக தொழில் நுட்ப அணி மற்றும் இளைஞர் அணி உறுப்பினர்கள் மாமல்லபுரம் திருவிடந்தையில் நடைபெறும் பாக முகவர்கள் கூட்டத்தில் தவறாமல் பங்கேற்க வேண்டும் என்று மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

சென்னை மண்டலம் மற்றும் விழுப்புரம் மண்டலங்களுக்கு உட்பட்ட பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் இளைஞர் அணி உறுப்பினர்கள் கூட்டம் இன்று (11.2.2026 புதன் கிழமை) மாலை 4 மணிக்கு மாமல்லபுரம் திருவிடந்தையில் நடைபெறுகிறது. இதில் முதலமைச்சர், கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்குகிறார்.

சென்னை மண்டல பொறுப்பாளர் மேனாள் ஒன்றிய அமைச்சர் ஆ. ராசா எம்.பி. மற்றும் மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ். சுதர்சனம் எம்எல்ஏ ஆகியோர் அறிவுறுத்தலின்படி, மாதவரம் வடக்கு பகுதிக்கு உட்பட்ட 15, 16, 17, 19, 23, 23 அ ஆகிய வட்டங்களுக்கு உட்பட்ட நிர்வாகிகள், பாக முகவர்கள், பாக உறுப்பினர்கள், பாக தகவல் தொழில்நுட்ப அணி மற்றும் இளைஞர் அணி உறுப்பினர்கள் அனைவரும் குறித்த நேரத்தில் வட்டச் செயலாளர்கள் கே. அங்குசாமி, இ. கண்ணப்பன், கே. கருணாகரன், மாத்தூர் கா. தாமரைச் செல்வன், பி.எஸ்.சந்துரு, வி. ஆர். குப்பன் ஆகியோருடன் மாநாடு நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்து கழகத் தலைவரின் உரையை முழுவதுமாக கேட்டு சட்டமன்றத் தேர்தலில் கழக வேட்பாளருக்கு வெற்றி வாய்ப்பு ஏற்படுத்த வேண்டும் என்று மாதவரம் வடக்கு பகுதி செயலாளர் புழல் எம். நாராயணன் தனது வேண்டுகோளில் தெரிவித்துள்ளார்.

சென்னை உயர்நீதிமன்ற உத்தரவின்படி -

சென்னை - மெரினா கடற்கரையில் 300 கடைகளுக்கான வியாபாரிகள் தேர்வு!

நீதியரசர் முன்னிலையில் நாளை குலுக்கல்!

சென்னை,பிப்.11-

சென்னை உயர்நீதிமன்றத்தின் உத்தரவுபடி, சென்னை மெரினா கடற்கரையில் அமைக்கவுள்ள 300 கடைகளுக்கான வியாபாரிகளை தேர்வு செய்வதற்கு, 12.02.2026 அன்று காலை 10.00 மணிக்கு, பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டட வளாகத்தில் அமைந்துள்ள "அம்மா மாளிகை" கூட்டரங்கில், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் தலைமையிலான, பெருநகர சென்னை மாநகராட்சி அலுவலர்கள் அடங்கிய இடைக்கால குழுவின் (Adhoc Committee) ஒத்துழைப்புடன் ஜம்மு காஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் என்.பால் வசந்தகுமார் மேற்பார்வையில் குலுக்கல் நடைபெறவுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சி ரிப்பன் கட்டிட வளாகம், "அம்மா மாளிகை" கூட்டரங்கில் இன்று (11.02.2026) பகல் 02.30 மணிக்கு நடைபெற விருக்கும் குலுக்கல் நடைபெறுவதற்கான ஒத்திகையினை ஜம்மு-காஷ்மீர் உயர்நீதிமன்ற முன்னாள் தலைமை நீதியரசர் மேன்மைமிகு என்.பால் வசந்தகுமார் மேற்பார்வையிடுகிறார்.